**வாக்குமூலம்**

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.1386/2022**
**வழக்கு சாட்சி DW.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திருமதி.என்.வி.அமுதா அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கிருஷ்ணசாமி | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : நாச்சிமுத்து | கணவர் பெயர் | : --- |
| கிராமம் | : சத்திரப்பட்டி | வயது | : சுமார் 60 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 03.09.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

<u>வாதிகள் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை</u>

லதா என்பவர் என் மீது என்ன பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் ? எனக்கு பங்கு வேண்டும் என்று வழக்கு போட்டுள்ளார்கள். எந்த சர்வே எண்ணில் உள்ள சொத்தை பொறுத்து பாகம் கேட்டுள்ளார்கள் என்றால் ? சர்வே எண்.320 ஆகும். எவ்வளவு விஸ்தீரணத்திற்கு வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் ? 1 ஏக்கர் 25 செண்ட் நிலத்திற்கு வழக்கு போட்டுள்ளார்கள். எவ்வளவு பங்கு பாத்தியம் கேட்டுள்ளார்கள் என்றால் ? எனக்கு பங்கு வேண்டும் என்று தான் கேட்டுள்ளார்கள். எவ்வளவு என்று தெரியவில்லை. லதா எனக்கு என்ன உறவு ஆகிறது என்றால் ? அக்கா மகள் என்ற உறவு ஆகிறது. நானும், லதா என்பவரும் நாச்சிமுத்து கவுண்டரின் வாரிசுகள் என்றால் ? சரிதான். சர்வே எண்.320 என்ற புலமானது யாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் ? எனக்கு பாத்தியப்பட்ட சொத்து ஆகும். எனக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் ? எனது தகப்பனார் எனக்கு கொடுத்த சொத்து ஆகும். எனது தகப்பனாருக்கு எப்படி பாத்தியம் என்றால் ? எனது தகப்பனாருக்கு பூர்விக சொத்து ஆகும். எனது தகப்பனார் எதன் வழியாக எனக்கு சொத்துக்களை பாத்தியப்படுத்தி வைத்தார் என்றால் ? மகன் என்ற முறையில் எனக்கு உயில் எழுதிய வகையில் எனக்கு பாத்தியம் ஆகும். உயில் சாசனம் எப்போது எழுதி வைத்தார்கள் என்றால் ? 20.02.2017ம் ஆண்டு உயில் எழுதி வைக்கப்பட்டது. அந்த உயில் சாசனம் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் ? பதிவாளர் அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டது.

சத்திரப்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டது என்றால் ? சத்திரப்பட்டியில் உள்ள பழனிச்சாமி என்பவரது அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டது ஆகும். சத்திரப்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து பத்திரப்பதிவாளர் பழனிச்சாமியின் அலுவலகம் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் ? ஒரு கி.மீ தூரம் இருக்கும். எவ்வளவு ரூபாய் பத்திரத்தில் உயில் சாசனம் எழுதப்பட்டது என்றால் ? ஒரு வெள்ளை பேப்பரில் தான் உயில் எழுதப்பட்டது. உயில் சாசனத்தை யார் தயார் செய்தது என்றால் ? பழனிச்சாமி தான் தயார் செய்தார். உயிலில் உள்ள வாசகத்தை பழனிச்சாமி சொன்னாரா என்றால் ? ஆமாம். உயில் எழுதும் போது யார் யார் சென்றிருந்தோம் என்றால் ? பழனிச்சாமி, எனது அப்பா, நான், இரண்டு பேர் சாட்சிகள் சென்றோம். யார் யார் சாட்சி போட்டார்கள் என்றால் ? காளிமுத்து, கந்தசாமி ஆகிய இரண்டு நபர்களும் சாட்சி போட்டார்கள். காளிமுத்துவும், கந்தசாமியும் எனக்கு எத்தனை ஆண்டுகாலமாக பழக்கம் என்றால் ? ஒரு 7, 8 வருடங்களாக பழக்கம். எத்தனை மணிக்கு உயில் எழுதினோம் என்றால் ? காலை 11.00 மணிக்கு ஆரம்பித்து 04.00 மணிக்கு முடித்தோம். கந்தசாமி எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் ? முத்துநாயக்கன்பட்டி ஆகும். காளிமுத்து என்பவர் காளாஞ்சிபட்டி ஊரை சேர்ந்தவர். எனது தகப்பனார் எப்போது இறந்தார் என்றால் ? 24.06.2017ம் தேதி இறந்துவிட்டார். எனது தகப்பனார் இறக்கும் போது அவருக்கு வயது என்ன இருக்கும் என்றால் ? 92 வயது இருக்கும். எப்படி இறந்தார் என்றால் ? நன்றாக தான் இருந்தார். திடீரென்று கீழே விழுந்து கால் உடைந்துவிட்டது. சக்கரை நோய் இருந்தது. எனது தகப்பனார் கீழே விழுந்து எத்தனை மாதங்கள் உயிருடன் இருந்தார் என்றால் ? எனது தகப்பனாருக்கு 80 வயது ஏற்பட்ட போது கீழே விழுந்தார். இரண்டு மாதங்கள் மருத்துவமனையில் இருந்துவிட்டு வந்து பிறகு நன்றாக தான் இறந்தார். பத்திர பதிவு அலுவலகத்திற்கும், பத்திர எழுத்தர் பழனிச்சாமி அலுவலகத்திற்கும் ஒரு கி.மீ தூரம் மட்டுமே இருந்துள்ள நிலையில் ஏன் பத்திரத்தை பதிவு செய்யவில்லை என்றால் ? எனது தகப்பனார் இங்கேயே உயில் எழுதிக் கொள்ளலாம் என்றும், சொன்னதால் பதிவு ஏற்படுத்தவில்லை. நான் தாக்கல் செய்துள்ள உயில் சாசனமானது வழக்கிற்காக வேண்டி உற்பத்தி செய்யப்பட்ட உயில் சாசனம் என்றால் ? சரியல்ல. எனது தகப்பனார் தான் எழுதிக் கொடுத்தார். 20.02.2017ம் ஆண்டு எந்த பத்திரங்கள் வாங்கினாலும் ஆதாரம் கொடுக்க வேண்டும் என்ற நிலையில் வேண்டுமென்றே பச்சை கலர் காங்கர் பேப்பரில் பதிவு செய்யப்படாத உயில் சாசனம் எழுதிக் கொண்டோம் என்றால் ? இதுவே போதும் என்று தான் உயில் எழுதினார்கள். எனது தகப்பனாரை பத்திர பதிவு அலுவலக்கிற்கு எவ்வாறு அழைத்து சென்றோம் என்றால் ? பைக்கில்

அழைத்து சென்றோம். சாட்சிகள் எவ்வாறு வந்தார்கள் என்றால் ? காளிமுத்து மற்றும் கந்தசாமி ஆகியோர்கள் நாங்கள் சொன்னதன் பேரில் ஒருவர் பஸ்ஸில் வந்தார். மற்றொருவர் இருசக்கர வாகனத்தில் வந்தார். பத்திர எழுத்தர் அலுவலகத்திற்கு சென்று போன் செய்தோமா என்றால் ? 4 நாட்களுக்கு முன்பாகவே சொல்லி வைத்திருந்தோம். 4 நாட்களுக்கு முன்பு நான் கூப்பிட்டு சொன்னேனா என்றால் ? எனது அப்பா கூப்பிட்டு சொன்னார். எனது தகப்பனார் உயிருடன் இருந்த போது பி.வா.சா.ஆ.3 உயில் சாசனம் எழுதவில்லை என்றாலும், எனது தகப்பனார் இறந்த பிறகு பி.வா.சா.ஆ–3 உயில் சாசனத்தை வழக்கிற்காக வேண்டி உற்பத்தி செய்துகொண்டோம் என்றாலும் ? சரியல்ல. பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் சாதாரணமாக வெறும் கண்களால் பார்க்கும் பொழுதே எனது தகப்பனாரின் கை ரேகை உற்பத்தி செய்யப்பட்டது என்ற விபரம் தெரியும் என்றால் ? சரியல்ல. தாவா சொத்திற்கு வரிகள் யார் செலுத்தி வருகிறார்கள் என்றால் ? நான் தான் செலுத்தி வருகிறேன். எவ்வளவு வரி செலுத்தி வருகிறேன் என்றால் ? ஒரு 700 ரூபாய் கட்ட சொல்வார். எனது வீட்டில் கட்டுவார்கள். வரி செலுத்திய ரசீதுகள் யார் பெயரில் உள்ளது என்றால் ? எனது பெயரில் உள்ளது. எந்த ஆண்டு எனது பெயருக்கு மாற்றப்பட்டது என்றால் ? உயில் எழுதியபோதே மாறிவிட்டது. நாளது வரை தாவா சொத்திற்கு எனது பெயரில் தான் வரி செலுத்தி வருகிறோம் என்றால் ? ஆமாம். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ–4 ஆவணத்தில் 30.03.2023ம் தேதி 1432 பசலி ஆண்டிற்கு நாச்சிமுத்துகவுண்டர் பெயரில் 10 ரூபாய் வரி செலுத்தப்பட்டுள்ளதாக உள்ளது என்றால் ? சரிதான். எனது தகப்பனார் எங்கு இறந்தார் என்றால் ? எனது வீட்டில் தான் இறந்தார். எனது வீட்டின் கதவு எண் என்ன என்றால் ? கதவு எண் தெரியாது. கதவிற்கு பெயிண்ட் அடித்துவிட்டதால் எனக்கு தெரியாது. பூர்விக சொத்தில் லதா என்பவருக்கு எதன் அடிப்படையில் பாகம் கிடைக்காது என்று சொல்கிறேன் என்றால் ? உயில் உள்ளதால் தான் லதா என்பவருக்கு வழக்கு சொத்தில் பாகம் இல்லை என்று சொல்கிறேன். லதா என்பவருக்கு பாகம் கிடைக்க கூடாது என்ற நோக்கத்தில் தான் பி.வா.சா.ஆ–3 உயில் சாசனத்தை உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? சரியல்ல. 2017ம் ஆண்டு எனது தகப்பனார் உயில் எழுதியதற்கு பிறகு நான் சத்திரப்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றேனா என்றால் ? சென்று வந்துள்ளேன். சாட்சி கையொப்பம் போட்டு வந்துள்ளேன். யாராவது அழைத்தால் சென்று சாட்சி கையொப்பம் செய்து வருவேன் என்றால் ? சரியல்ல. எனது வீடு பதிவு அலுவலகத்திற்கு அருகாமையில் உள்ளது என்றால் ? சரிதான். எந்நேரமும் பத்திர பதிவு அலுவலகத்தில் தான் உட்கார்ந்து இருப்பேன் என்றால் ? பஸ்டாப்

உள்ளதால் அங்கு உட்கார்ந்து இருப்பேன். வாதியின் தாயாரை 1–ம் பிரதிவாதியான வாதியின் தகப்பனார் என்ன செய்தார் என்றால் ? கொலை செய்தார். ஜெயிலுக்கு சென்றுவிட்டு 16 ஆண்டுகள் இருந்துவிட்டு திரும்ப வந்துவிட்டார். வாதியின் தகப்பனார் கொலை செய்துவிட்டு சிறைக்கு சென்றது, பிறகு சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டு வெளியில் வந்தது போன்ற செயல்பாடுகளால் வாதியின் வழக்கு பாதிக்காது என்று சொன்னால் ? சரியல்ல.

(தொடர்ச்சியான குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.09.03 19:08:55 +0530

சார்பு நீதிபதி

ஓட்டன்சத்திரம்